

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், அதங்கோட்டில் உள்ள தமிழ்பெரும்புலவர் அதங்கோட்டாசான் அவர்களின் சிலைக்கு இன்று (15.12.2016) மாலை அணிவித்து, மலர் தூவி, மரியாதை செலுத்தினார்.

செ.வெ.எண்: 873/2016 நாள்: 15.12.2016

**கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், தமிழ்பெரும்புலவர் அதங்கோட்டாசான் அவர்களின் சிலைக்கு இன்று (15.12.2016) மாலை அணிவித்து, மலர் தூவி, மரியாதை செலுத்தினார்.**

தமிழ்பெரும்புலவர் அதங்கோட்டாசான் சங்ககால புலவர்களின் தலை சிறந்த ஒருவராவார். இவர் விளவங்கோடு தாலுகாவிலுள்ள அதங்கோடு எனும் கிராமத்தில் பிறந்தார். இவரின் பெருமையை நினைவுகூறும் வகையில், அதங்கோட்டில் தமிழக அரசின் மூலம், ரூ. 65 இலட்சம் செலவில் 8 சென்ட் வளாகத்தில் பீடம் கட்டி, சிலை அமைத்து, மாண்புமிகு தமிழக முன்னாள் முதல்வர் புரட்சித்தலைவர் பாரத ரத்னா எம்.ஜி.இராமச்சந்திரன் அவர்களால் 29.04.1984 அன்று முப்பெரும் விழா மூலம் திறந்து வைக்கப்பட்டது. மேலும், இவர் பிறந்த ஊரான அதங்கோட்டில், இவ்வாண்டில் 15.12.2016 அன்று அரசு விழாவாக நடத்த தமிழக அரசு அனுமதி வழங்கியுள்ளது.

அதனடிப்படையில் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் திரு. சஜ்ஜன்சிங் ரா.சவான் இ.ஆ.ப., அவர்கள், தமிழ்பெரும்புலவர் அதங்கோட்டாசான் அவர்களின் சிலைக்கு மாலை அணிவித்து, மலர் தூவி, மரியாதை செலுத்தினார்.

அதனை தொடர்ந்து, அதங்கோட்டாசான் அறக்கட்டளை சார்பாக, தலைவர் முனைவர் கொ. கோவிந்தநாதன், துணைத்தலைவர்கள் திரு. சாரங்கதரன், திரு. நாஞ்சில் பீட்டர், துணை செயலாளர் திரு. ஐயப்பன் ஆகியோர்கள் மாலை அணிவித்து, மரியாதை செலுத்தினார்கள்.

இந்நிகழ்ச்சியில் செய்தி மக்கள் தொடர்பு அலுவலர் திரு. ப. காந்தி, பொதுப்பணித்துறை (கட்டிடம்) உதவி செயற்பொறியாளர் பொறி சுதாகரன், உதவி மக்கள் தொடர்பு அலுவலர் (செய்தி) திரு. நி. சையத் முஹம்மத், முஞ்சிறை வட்டார வளர்ச்சி அலுவலர் திரு. சுனில் உள்ளிட்ட அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

---

வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், கன்னியாகுமரி மாவட்டம்.